**தலைப்பு 416 - சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**அபிப்பிராயம்**

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

----------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அமைச்சு 2020 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டமையினால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவை இல்லாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

---------------------

## 2.1 செலவு முகாமைத்துவம்

--------------------------------

நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்காக சரியான மற்றும் உண்மையான மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை என்பதைப் பின்வரும் அவதானிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இரண்டு மீண்டெழும் செலவு விடயங்களுக்காக திட்டமிடப்பட்ட ரூபா 250,000 ஆன மொத்த ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் செலவுத் தலைப்பின் கீழ் காணப்பட்ட 18 செலவு விடயங்களின் மூலம் செலவிடப்பட்ட ரூபா 38,999,218 ஆன செலவுகள் இரு அமைச்சுக்களினதும் உடன்பாட்டின் | நிறுவனத்தின் நோக்கம் மற்றும் செயற்பணியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வருடாந்தச் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு சரியான மற்றும் உண்மையான |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் மாற்றல் பத்திரத்தின் மூலம் இராஜாங்க அமைச்சின் செலவாகக் கணக்கிடப்பட்டுள்ளது. | மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒதுக்கங்கள் போதியளவில் இல்லாமையினால் 4 மீண்டெழும் செலவினங்களுக்காக திட்டமிடப்பட்ட ரூபா 8,650,000 ஆன ஒதுக்கங்கள் ரூபா 10,927,850 வரையிலும் மூலதனச் செலவுகளுக்காக திட்டமிடப்பட்ட ரூபா 500,000 ஆன ஒதுக்கங்கள் ரூபா 900,000 வரையிலும் நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களின் மூலம் அதிகரிக்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஒதுக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன மற்றும் அவ்வாறான ஒதுக்கங்கள் மாற்றப்பட்டமைக்கான காரணங்கள் குறிப்பிடப்படடுள்ளது. | - மேற்படி - |
| (இ) | மூலதன விடயங்கள் 4 இற்காகத் திட்டமிடப்பட்டுள்ள ரூபா 8,100,000 ஆன ஒதுக்கங்களில் நூற்றுக்கு 55 வீதம் அதாவது ரூபா 4,438,112 ஆனது நோக்கங்களுக்கான செயற்பாடுகளுக்காகச் செலவிடப்படாமையால் சேமிக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு செலவு விடயங்களின் சேமிப்பு வீதங்கள் நூற்றுக்கு 26 வீதத்திலிருந்து நூற்றுக்கு 98 வீதம் சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. 06 மீண்டெழும் செலவு விடயங்களுக்காகத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 9,450,000 ஆன ஒதுக்கங்களில் நூற்றுக்கு 34 வீதம் அதாவது ரூபா 3,250,095 நோக்கங்களுக்கான செயற்பாடுகளுக்காக | ஒதுக்கங்களின் சேமிப்புகளுக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்படாது சேமிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு செலவு விடயங்களின் சேமிப்பு வீதங்கள் நூற்றுக்கு 29 வீதத்திலிருந்து நூற்றுக்கு 62 வீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | | |
| (ஈ) | அமைச்சு அலுவலகத்தின் சம்பளம் மற்றும் ஊதியம் என்பவற்றுக்கான ஒதுக்கங்கள் ரூபா 4,700,000 என்பதுடன் முற்பணங்கள் மற்றும் விடுமுறை நாட் சம்பளங்களுக்காக ரூபா 3,875,000 அதாவது சம்பளங்கள் மற்றும் ஊதியங்களில் நூற்றுக்கு 82 வீதத்திற்குச் சமனான ஒதுக்கங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. | 2020 ஆகஸ்ட் 31 வரையில் சுகாதார அமைச்சினால் செய்யப்பட்ட செலவுகளை ஈடுசெய்யக் கூடியவாறு சம்பளம் மற்றும் ஊதியம் மற்றும் முற்பண மற்றும் விடுமுறை நாள் சம்பளம் உட்பட அனைத்து ஏனைய செலவு விடயங்களுக்காகவும் ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. | - மேற்படி - |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 05 இற்காக ரூபா 136,153 ஆன சேமிப்புக்களை விஞ்சியதாக ரூபா 2,837,253 ஆன பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்ததுடன் 2020 ஆம் வருடத்திற்காக ஒதுக்கங்கள் திட்டமிடப்படாத 02 செலவு விடயங்களுக்கு 2020 திசெம்பர் 31 இல் ரூபா 84,992 ஆன பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | 2020 ஆம் வருடத்திற்காக இடைக்காலக் கணக்குகளின் மூலம் வழங்கப்பட்ட ஒதுக்கங்கள் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக போதுமானளவில் இல்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 முற்பணக் கணக்கு மிகுதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐந்து வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 288,618, சேவையிலிருந்து விலகிச் சென்று 1 வருடம் தொடக்கம் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட ஒரு உத்தியோத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 297,095 ஆனவை மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 288,618 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் இடம் மாற்றலாகிச் சென்ற சேவை நிலையம் மூலம் கணக்குகள் தீர்க்கப்படாமையினால் நிலுவை மிகுதியாக உள்ளதுடன் அது விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இடம் மாற்றம் அல்லது சேவையை முடிவுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கடன் மிகுதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்தரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை. | | | |
| i. நிதிப்பிரமாணம் 891(1) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களின் தரவுகளை உள்ளடக்கியதாக பிணைப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. | அரச உத்தியோகத்தர்களின் பிணைப் பதிவேடு நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 891(1)இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாக பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக பிணைப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | நிதிப்பிரமாணம் 110 | நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் தயாரிக்கப்பட்டிருந்த இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படவில்லை. | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் இழப்புக்கள் மற்றம் நட்டங்கள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். |
| iii. | நிதிப்பிரமாணம் 1646 | வாகனங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட மாதத்தைத் தொடர்ந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் பயணஙகள் தொடர்பான மாதாந்தப் பொழிப்பின் மூலப் பிரதியுடன் அந்தந்த மாதத்திற்கான தினசரி ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்புக்கள் தற்போது பரிசோதிக்கப்பட்டு வருவதுடன் மற்றும் எதிர் காலத்தில் அனைத்து மாதங்களுக்கும் குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | அரச அமைச்சுக்களுக்கு சொந்தமான வாகனங்களுக்கான எரிபொருள் எரிப்பின் அளவு தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிப்புப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். |

**2.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ளதாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாகப் பராமரிக்கப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்கத் தெசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 நல்லாளுகை

### 3.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்கான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வாகனப் பட்டியலில் வாகனங்களின் கிரயம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 48 மோட்டார் சைக்கிள், அமைச்சரின் பதவியணிக்கான 06 வாகனங்கள் மற்றும் நீக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனமொன்றின் கிரயம் என்பன காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், கிரயம் ரூபா 214,314,951 ஆன நிதியல்லாச் சொத்துக்களின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. | வாகனங்களின் கிரயத்துடனான சொத்துக்கள் பதிவோடொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றதுடன் 48 சைக்கிள்கள் ஒசுகொவி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டதாகவும் மற்றும் வரையறுக்கப்பட்ட ஒசுகொவி கம்பனி கலைக்கப்படுவதற்கு தயாரானதுடன் சைக்கிள்களின் பதிவுச் சான்றிதழ்கள் அமைச்சிற்கு அனுப்பட்டதுடன் ஆனால் சொத்துக்களின் பெறுமதி தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் எதிர் காலத்தில் நியமிக்கப்படுகின்ற குழுவின் மூலம் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச அமைச்சுக்களுக்கு சொந்தமான அனைத்து வாகனங்களினதும் கிரயங்கள் கணக்கிடப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் இராஜாங்க அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 403 என்பதுடன் அத் திகதியில் உள்ளபடியான பதவியணி 289 என்பதால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நூற்றுக்கு 28 வீதத்திற்கு சமனான வெற்றிடங்களின் எண்ணிக்கை 114 ஆகும். அவ் வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்கள் நூற்றுக்கு 27 வீதமும் மூன்றாம் மட்டத்தில் வெற்றிடங்கள் நூற்றுக்கு 25 வீதமும் இரண்டாம் மட்டத்தில் வெற்றிடங்கள் நூற்றுக்கு 29 வீதமும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் வெற்றிடங்கள் நூற்றுக்கு 17 வீதமும் ஆகும். சிரேஷ்ட மட்டத்தில் 04 பதவிகள் மற்றும் இரண்டாம் மட்டத்தில் 106 பதவிகளுக்குமான வெற்றிடங்கள் காணப்பட்டமை இராஜாங்க அமைச்சின் செயலாற்றல் இலக்கை அடைந்து கொள்வதற்கு அது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த வெற்றிடங்கள் தொடர்பில் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் இரண்டாம் மட்டத்தின் அபிவிருத்தி அதிகாரிகளின் சேவையின் வெற்றிடங்களுக்கு அதிகாரிகளை நியமிப்பதற்கு அந்த அமைச்சின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையின் பிரகாரம் வெற்றிடங்கள் முறையாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |